ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதி விசேஷமானது

අංක 2389/28 – 2024 ජූනි මස 22 වැනි සෙනසුරාදා – 2024.06.22
*2389/28 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு யூன் மாதம் 22 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உபபிரிவின் பிரகாரம் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜூட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான், இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

மத்திய மாகாணத்தில் நுவரெலியா மாவட்டத்தில் வலப்பனை பிரதேச செயலகப் பிரிவில் ஒய பலாத்த கோரளை சிறு பிரிவில் பன்னல கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட NU/WLP/93/261 இலக்க முடையதும் 1999.03.22 ஆந் திகதியுடையதுமான ஆரம்ப வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள கீழ்க் குறிப்பிடப்படும் பெயர் மற்றும் விஸ்தீரணத்தையுடைய காணித்துண்டின் எல்லைகள் :

*01.* **துண்டு ‘A’ - ஹபுகொல்லே ஹேன - விஸ்தீரணம் : *1.464* ஹெக்டயார்**

வடக்கு: அகல மற்றும் அரசிற்கு சொந்தமான ஹபுகொல்லே ஹேன ; கிழக்கு: அரசிற்கு சொந்தமான ஹபுகொல்லே ஹேன மற்றும் நடைபாதை ; தெற்கு: நடைபாதை மற்றும் வை. எம். டிங்கிரி பண்டா உரிமை கோரும் ஹபுகொல்லே தோட்டம் ; மேற்கு: வை. எம். டிங்கிரி பண்டா உரிமை கோரும் ஹபுகொல்லே தோட்டம், ஹபுகொல்லே குளம் மற்றும் அகல.

ஹரின் பெர்னாண்டோ,
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.

எனது இல. : 03J/92/FR/96.
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,
“மிஹிகத மெதுர”, காணிச் செயலகம்,
இல.1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
*2024*, மாச்சு *12*.

EOG 06 - 0159